தூத்துக்குடி மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் (கூ.பொ) மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: திரு.த.விஜயகுமார்

ந.க.அ2/149/2025 நாள்: 17.07.2025

பொருள்: பொதுப்பணி – நிலஅளவை பதிவேடுகள் துறை - தூத்துக்குடி மாவட்டம் – திருநெல்வேலி மாவட்டத்தில் பணியிலிருக்கும் போது காலஞ்சென்ற குறுவட்ட அளவர் பா.பாபுசங்கர் என்பவரின் வாரிசுதாரரும் சகோதரருமான திரு.பா.ராஜா, என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

---

பார்வை:

1. அரசுக் கடித (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (Q-1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண் 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நாள் 08.03.2023.
3. அரசு கடித எண் 5532/G2/2023-1, மனிதவள மேலாண்மைத் (G2) துறை, நாள் 20.09.2023.
4. சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கடிதம் எண் ந.க.ர1/13427/2022 (7) (நி.அ) நாள் 06.01.2025
5. தூத்துக்குடி மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் செயல்முறை ஆணை ந.க.அ2/149/2025, நாள் 09.01.2025.

---------

ஆணை:

திருநெல்வேலி மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறையில் குறுவட்ட அளவராக பணியாற்றி பணியிலிருக்கும் போது 10.03.2022 அன்று காலஞ்சென்ற பா.பாபு சங்கர் என்பவரின் வாரிசுதாரரும், சகோதரருமான திரு.பா.ராஜா என்பவருக்கு பார்வை (4)ல் கண்டுள்ள ஆணையின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்க ஆணை பெறப்பட்டதை தொடர்ந்து, பார்வை (5)ன் படி திரு.பா.ராஜா என்பவருக்கு தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டு தனியர் 10.01.2025 முற்பகல் இளநிலை உதவியாளராக இம்மாவட்டத்தில் பணியேற்றுள்ளார்.

த.பி.பா...

Scanned with OKEN Scanner

பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையில் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் பணிகளை அவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் தகுதிக்கு உட்பட்டு நியமன அலுவலரே முறைப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை மற்றும் அரசுக் கடிதம் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன்படி, இவ்வலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.பா.ராஜா என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 10.01.2025 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

17/7/25

உதவி இயக்குநர்
மாவட்ட நிலஅளவை அலுவலகம்
தூத்துக்குடி

பெறுநர்:

திரு.பா.ராஜா,
இளநிலை உதவியாளர்
(வழி)-கண்காணிப்பாளர் 2

17.07.25

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:

1. இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்(நிலஅளவை), சென்னை-5
2. மண்டல துணை இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, மதுரை

நகல்: அ1, அ4, அ5 மற்றும் அ7 இருக்கைகளுக்கு புதிய எண்ணில்

நகல்: அறிவிப்பு பலகை

Scanned with OKEN Scanner